செய்தி வெளியீடு எண்:587 நாள்: 12.12.2016

## செய்தி வெளியீடு

### “வர்தா” புயல் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் எண்ணூர், கத்திவாக்கம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கியுள்ளவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (12.12.2016) இரவு சென்னை, எண்ணூர் பகுதியில் “வர்தா” புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கத்திவாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமையும், அத்துடன் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமினை நேரில் சென்று பார்வையிட்டு அங்கு தங்கியுள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரண பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

வங்கக் கடலில் உருவான “வர்தா” புயல், சென்னைக்கு அருகில் கரையை கடக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் மூலம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசு தலைமைச் செயலாளர், துறை செயலாளர்கள், காவல் துறை, தீயணைப்புத் துறை, சென்னை பெருநகர் மாநகராட்சி, பொதுப்பணித் துறை, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உட்பட பல்வேறு துறை அலுவலர்களுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தியிருந்தார்கள்.

மழையால் பாதிக்கக்கூடிய தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லவும், நிவாரண முகாம்களில் தங்கவும் உரிய ஏற்பாடுகள்

செய்யப்பட்டன. மேலும், பொதுமக்கள் தங்களின் இருப்பிடத்தை விட்டு வெளியே செல்லவேண்டாம் எனவும், புயல் தாக்கம் ஏற்படுவதற்கு முன் வெளியே சென்றவர்கள் அருகிலுள்ள பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

"வர்தா" புயலினால் ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் சீரமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டு, அதன்படி போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இன்று காலை முதல் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் கத்திவாக்கம், அரசினர் மேல்நிலைப் பள்ளி நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களிடம், உணவு முறையாக வழங்கப்படுகிறதா என்று விசாரித்ததோடு, முகாமில் மருத்துவ வசதிகள் உட்பட அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயகுமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு ஓ.எஸ். மணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய்த்

துறை அமைச்சர் திரு ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு கடம்பூர் ராஜு ஆகியோர் உடன் இருந்தனர்.

மேலும், அரசு தலைமைச் செயலாளர் முனைவர் பா.இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,(ஓய்வு), முதலமைச்சரின் செயலாளர் திரு கே.என்.வெங்கடரமணன், இ.ஆ.ப.,(ஓய்வு), முதலமைச்சரின் செயலாளர் திரு இராமலிங்கம், இ.ஆ.ப., சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., செய்தித் துறை இயக்குநர் திரு ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் திரு. டி. கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் திரு டி.கே.ராஜேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு ஜார்ஜ், இ.கா.ப., ஆகியோர் உடன் சென்றனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**